இதைப்பற்றி அனுதாபத்துடன் கவனிப்பதாகக் கூறினார்கள். மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய்வரை கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்த உதவி கிடைக்கும் என்ற நல்ல நம்பிக்கையில் அரசாங்கம் இருக்கிறது. அந்த உதவி கிடைத்தால் பெரிய அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

Public Buildings (Licensing) Act.

* 59 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of buildings for which licence has been obtained from the authorities under the Madras Public Buildings (Licensing) Act; and

(*b*) the steps taken by the Government to enforce the Act?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இச் சட்டத்தின் கீழ் உரிமங்கள் பெற விண்ணப்பம் செய்துகொள்வதற்கான காலவரம்பு அரசாங்கத்தால் 31—3—1969 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் இச்சட்டத்தின் விதித்துறைகள் முனைப்புடன் செயல்படுத்தப்படவில்லை.

Coimbatore Headquarters Hospital.

* 60 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the labour ward in Coimbatore Headquarters Hospital is in a highly insanitary condition; and

(*b*) the reason for the delay in occupying the new buildings that have been built and completed a year ago?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

(அ) இல்லை.

(இ) ஏற்கனவே புதிய மகப்பேறு மருத்துவமனை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு

* 61 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.